O.S. 109/2022

சார்பு நீதிமன்றம், விருதுநகர்

நாள்:10.03.2026

DW1: ராவனேஸ்வரன் த/பெ– துரைச்சாமி

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி–**

6) 1923ம் தேதிய நன்கொடை பத்திரத்தில் 7 ஏக்கர் 64 செண்டில் பிரிவினையில்லாத 3 ஏக்கர் 82 செண்டில் என குறிப்பிடப்பட்டுள்ளது, தெற்கு கடைசி என குறிப்பிடவில்லை. தங்கையா தேவர், அவரது மனைவி கிருஷ்ணம்மாள், அவரது சகோதரர் அய்யாச்சாமி தேவர் ஆகியோர்கள் தாவா சொத்து உட்பட சில சொத்துக்களை மாரியப்ப மூப்பனார் என்பவருக்கு 1931ம் வருடம் கிரையம் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். மேற்படி கிரைய பத்திரத்தில் 1912ம் வருட கிரைய பத்திரம் மற்றும் 1923ம் வருடம் நன்கொடை பத்திரமும் மூலமாக தாவா சொத்து கிடைக்கப்பெற்றதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வா.சா.ஆ.5 1944ம் வருட கிரைய ரத்து பத்திரம் மூலம் 1931ம் வருட கிரைய பத்திரம் ரத்து செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

7) என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.5 ஆவணம் 1119/1944 கிரைய ரத்து பத்திரம் 1931ல் தங்கையா தேவர், அவரது மனைவி கிருஷ்ணம்மாள், அவரது சகோதரர் அய்யாச்சாமி ஆகியோர்கள் மாரியப்ப மூப்பனாருக்கு கொடுத்த கிரையத்தினை ரத்து செய்து கொடுத்த பத்திரம் என்றால் சரிதான். 1923, 1929ம் வருடங்களில் மாரியப்ப மூப்பனார் அடமான பணத்தை செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு செலுத்த தவறியதால் 1944ம் வருட கிரைய ரத்து பத்திரம் எழுதப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

8) கிரையம் ரத்து செய்யப்பட்டதற்கான காரணம் மேற்படி கிரைய ரத்து ஆவணத்தில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1912 ம் வருட கிரைய பத்திரம் மற்றும் 1923 ம் வருட நன்கொடை பத்திரம் மற்றும் 1944 ம் வருட கிரைய ரத்து பத்திரம் ஆகியவற்றின் மூலம் தாவா சொத்து வாதிகளின் மூதாதையர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. வாதிகளின் தகப்பனார் முருகானந்தம் மற்றும் சிங்கத்துரை ஆகியோர்கள் மேற்படி சொத்தை பாகப்பிரிவினை செய்தும், பட்டா ஏற்பட்டு அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சர்வே எண்.964/2 ஏ 2 என உட்பிரிவு செய்யப்பட்டு முருகானந்தம் பெயரில் பட்டா எண்.828 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். சர்வே எண்.964/2 ஏ 1 டி என உட்பிரிவு செய்யப்பட்டு சிங்கத்துரை பெயரில் பட்டா எண்.490 வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். 3 ஏக்கர் 82 செண்டில் சிங்கத்துரை மற்றும் முருகானந்தம் பெயரில் உள்ள சொத்துக்கள் தவிர மீதம் உள்ள 1 ஏக்கர் 39 செண்ட் சர்வே எண்.964/2 ஏ 3 ல் உள்ளது என்றால் சரிதான், அது எனக்கு பாத்தியப்பட்ட இடமாகும்.

9) சர்வே எண்கள்.964/2 ஏ 2, 964/2 ஏ 1 டி, 964/2 ஏ 3-ல் உள்ள மொத்த விஸ்தீரணத்தை கூட்டினாலும் கிரைய ஆவணத்தின் படி பூமியில் 27 செண்ட் நிலம் குறைவாக உள்ளது என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 தானசெட்டில்மெண்ட் பத்திரம் மூலம் எனது மகனுக்கு சர்வே எண்.964/2 ஏ 3 ல் 1 ஏக்கர் மற்றும் வேறு இரண்டு சொத்துக்களையும் கொடுத்துள்ளேன். மேற்படி சர்வே எண்.964/2 ஏ 3 உயில்படி பாத்தியப்பட்டதாகும். வா.சா.ஆ.9 தானசெட்டில்மெண்ட் பத்திரம் சர்வே எண்.964/2 ஏ 3 ல் உள்ள சொத்தானது உயில் மூலம் பாத்தியப்பட்டது என சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல.

10) 1956 ம் வருட பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் சர்வே எண்.964/2 குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான், சர்வே எண்.964/2 உயில் ஆவணம் மூலம் பாத்தியப்பட்டதாகும். வா.சா.ஆ.9 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் கண்ட மூன்று சொத்துக்களும் எந்தெந்த ஆவணங்களின் படி எனக்கு பாத்தியப்பட்டது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.9 தானசெட்டில்மெண்ட் ஆவணத்தில் எந்த சர்வே எண்ணில் உள்ள சொத்து உயில் மூலம் கிடைக்கப்பெற்றது என்று குறிப்பிட்டு சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.10 உயில் ஆவணத்தின் அசல் என்னிடம் உள்ளது, அதனை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன். எனது தகப்பனார் கிராம நிர்வாக அலுவலராக, திருத்தங்கல் கிராமத்தில் பணிபுரிந்தார். மேற்படி உயில் ஆவணத்தை நான் படித்து பார்த்துள்ளேன்.

11) மேற்படி உயில் ஆவணத்தில் 1956 ம் வருட பாகபாத்திய விடுதலை பத்திரம் மூலம் மேற்படி சொத்துக்கள் கிடைக்கப்பெற்றதாக சொல்லப்படவில்லை, பூர்வீக பாத்தியப்பட்ட சொத்துக்கள் என சொல்லப்பட்டுள்ளது. சர்வே எண்.964/2 ல் கோபால்சாமி நாயக்கர் மற்றும் ராமசாமி நாயக்கர் பெயரில் உள்ள பட்டா எண்.663 ஐ தவிர எனது தகப்பனார் பெயரிலோ, அவரது மூதாதையர் பெயரிலோ பட்டா எண் ஏற்பட்டுள்ளதா என்றால் இல்லை, மேற்படி சொத்து 3 தலைமுறையாக எங்கள் அனுபவத்தில் உள்ளது. உயில் ஆவணத்தில் மேற்படி சொத்துக்கள் எனது தகப்பனாருக்கு கிரைய பாத்தியப்பட்டதாகவோ, பட்டா உள்ளதாகவோ குறிப்பிடவில்லை என்றால் சரிதான், பட்டா உள்ளது, மேலும் பூர்வீக பாத்தியப்பட்டதாகும். பொதுவாக, ஒருவர் தனக்கு கிரைய பாத்தியப்பட்டோ, பட்டா ஏற்பட்டோ, பாகத்தின் படியோ கிடைக்கபெற்ற

சொத்துக்களை பொறுத்து மட்டுமே உயில் எழுத முடியும் என்றால் சரியல்ல.

12) மேற்படி சர்வே எண்.964/2 ஐ பொறுத்து 30.04.1984 ம் தேதிய உயில் ஆவணம் செல்லத்தக்கது அல்ல என பரிகாரம் வாதிகளால் கோரப்பட்டது என்றால் சரிதான். எனது தகப்பனார் துரைச்சாமி தேவர் தனது வாரிசுகள் உள்ளிட்ட ரத்த உறவுகளுக்கு மட்டும் உயில் எழுதி வைக்க முடியும் என்றால் சரிதான். வா.சா.ஆ.10 உயில் ஆவணம் எனக்கும், வளர்ப்பு மகன் கிருஷ்ணசாமி மகன் பாலகிருஷ்ணன், சேர்க்கை மனைவி சுந்தரம்மாள், சந்தானகிருஷ்ணன் ஆகியோர்களுக்கு எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். எனது தகப்பனார் தனக்கு கிரைய பாத்தியப்பட்ட சொத்துககளை மட்டும் தான் உயில் எழுத முடியும் என்றும், வேறு நபர்களுக்கு பாத்தியப்பட்ட சொத்தை கிரையம் எழுத முடியாது என்றால் மேற்படி சொத்துக்கள் எங்களது பூர்வீக சொத்துக்களாகும். மேற்படி உயில் ஆவணத்தில் சர்வே எண்.964/2 ஆனது சர்வே எண்.964/2 ஏ 3 என உட்பிரிவு சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான், ஏற்கனவே உட்பிரிவு செய்யப்பட்டு இருந்தது.

13) சர்வே எண்.964/2 ஏ 3 க்கு துரைச்சாமி தேவர் பெயரில் பட்டா இருந்ததா என்றால் இல்லை, துரைச்சாமி தேவர் அனுபவத்தில் இருந்தது. கோபால்சாமி நாயக்கரிடம் சர்வே எண்.964/2 ல் 7 ஏக்கர் 64 செண்டில் 5 ஏக்கர் 7 செண்ட் மட்டும் 1912 ம் வருடம் பேச்சியம்மாள் கிரையம் வாங்கினார் என்றால் சரியல்ல. மீதமுள்ள 2 ஏக்கர் 57 செண்ட் நிலத்தை எனது தகப்பனார் கிரையம் பெற்றரா என்றால் இல்லை, அனுபவத்தில் இருந்தது. பேச்சியம்மாள் மீதமுள்ள இடத்தை கிரையம் பெற்று, மொத்தம் 7 ஏக்கர் 64 செண்டில் தென்பகுதியில் உள்ள 3 ஏக்கர் 82 செண்டை

வாதிகளின் மூதாதையர்களுக்கு தானம் கொடுத்தார் என்றால் சரியல்ல.

14) மீதமுள்ள 3 ஏக்கர் 82 செண்டை தங்கையா தேவர் உடன் பிறந்த சகோதரர் அய்யாச்சாமி தேவர் அவர் பாகத்திற்கு கிடைத்த வடபகுதியை அனுபவம் செய்து விற்பனை செய்தார் என்றால் சரியல்ல, அது தவறாகும். 1984ம் வருடம் சர்வே எண்.964/2 ஏ 3 ஐ பொறுத்து எனது தகப்பனார் எழுதி வைத்த உயில் ஆவணம் சட்டப்படி செல்லாது என்றால் சரியல்ல. சர்வே எண்.964/2 ஏ 3 ஆனது 1991ம் வருடம் உட்பிரிவு செய்யப்பட்டதாக மாவட்ட வருவாய் அலுவலர் சார்பாக சாட்சியம் அளித்துள்ளனர் என்றால் சரியல்ல, 1985ம் வருடம் UDRன் படி உயில் மற்றும் அனுபவத்தின் படி எனது பெயரில் பட்டா வழங்கப்பட்டது. எனது பெயரில் உள்ள பட்டாவை தாக்கல் செய்துள்ளேன். வா.சா.ஆ.12 ல் மாவட்ட வருவாய் அலுவலர் வழங்கிய உத்தரவில் வாதிகள் மற்றும் அவரது முன்னோர்கள் தரப்பினர்களாக சேர்க்கப்படவில்லை என்றால் வாதிகள் மற்றும் அவரது முன்னோர்கள் மேற்படி சொத்திற்கு சம்மந்தம் இல்லை என்பதால் தரப்பினர்களாக சேர்க்கவில்லை, மேற்படி சொத்திற்கான பட்டாவில் தவறாக சேர்க்கப்பட்ட நபரின் பெயரினை நீக்கம் செய்ய மனு செய்தேன். சுபாஷ் சந்திரபோஸ் தரப்பினராக இல்லை என்றால் அவர் இறந்துவிட்டதால் அவரது மகன் உதயகுமாரை தரப்பினராக சேர்த்தேன்.

15) சர்வே எண்.964/2 ஏ 3 மற்றும் 963/1க்கும் சேர்த்து உத்தரவிடப்பட்டுள்ளது என்றால் சர்வே எண்.963/1க்கு வழக்கு நீதிமன்றத்தில் வழக்கு இருந்ததால் அதனை பொறுத்து தள்ளுபடி செய்யப்பட்டது. சர்வே எண்.964/2 ஏ 3க்கு எனது பெயரில் பட்டா வழங்க உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. அந்த உத்தரவில் சர்வே எண்.964/2 ஏ 3 ஆனது 1956ம் வருட உயில் ஆவணம் மூலமாக கிடைக்கப்பெற்றதாக

சொல்லப்பட்டுள்ளது என்றால் தவறுதலாக அவ்வாறு உள்ளது. மேற்படி உத்தரவில் 1985ம் வருடம் எனது பெயரில் தனித்த பட்டா இருப்பதாக சொல்லப்படவில்லை என்றால் சரிதான். மேற்படி உத்தரவில் கோபால்சாமி நாயக்கர் மற்றும் ராமசாமி பெயரில் உள்ள கூட்டுபட்டா, செட்டில்மெண்ட் ரிஜிஸ்டர் மற்றும் உயில் ஆவணம் ஆகியவை மட்டும் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

16) மேற்படி உத்தரவில் துரைச்சாமி தேவர், உயில் மூலம் சர்வே எண்.964/2 ஏ 3 ஐ எழுதி வைத்தது குறித்து நீதிமன்றம் மூலம் தீர்வு காண வேண்டும் என சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வாதிகளை தரப்பினர்களாக சேர்க்காமல் சர்வே எண்.964/2 ஏ 3 ஐ பொறுத்து மாவட்ட வருவாய் அலுவலர் பிறப்பித்த உத்தரவு வாதிகளை கட்டுப்படுத்தாது என்றால் சரியல்ல. மேற்படி உத்தரவிற்கு எதிராக 9ம் வாதி கருப்பசாமி மாண்புமிகு சென்னை உயர்நீதிமன்றம் மதுரை கிளையில் நீதிபேராணை மனு தாக்கல் செய்தார் என்றால் சரிதான். 1984ம் வருட உயிலில் எனது தகப்பனாரின் உடன் பிறந்தவர்கள் பற்றிய விபரத்தை குறிப்பிடவில்லை என்றால் சரிதான், அது தேவையில்லை என்பதால் குறிப்பிடவில்லை, ஏற்கனவே சொத்துக்கள் வாய்மொழியாக பாகப்பிரிவினை செய்யப்பட்டது. மேற்படி பாகப்பிரிவினை விபரம் உயிலில் சொல்லப்படவில்லை என்றால் சரிதான்.

17) வா.சா.ஆ.7 பாகபாத்திய விடுதலை பத்திரத்தில் துரைசாமி தேவர் உடன் பிறந்த அனைவரும் தரப்பினர்களாக இல்லை என்றால் சரிதான், அது தவிர ஏற்கனவே இரண்டு வாய்மொழி பாகங்கள் ஏற்பட்டுள்ளது. 1984ம் வருட உயில் ஆவணத்தில் மேற்படி விபரங்கள் சொல்லப்படவில்லை என்றால் சரிதான். வா.சா.ஆ.7 பாகபாத்திய விடுதலை

பத்திரத்தில் சர்வே எண்.964/2 சொல்லப்படவில்லை என்றால் சரிதான், மேற்படி சொத்து எனது தகப்பனாருக்கு தனிப்பட்ட அனுபவத்தில் இருந்து வரி செலுத்தியுள்ளார். 1956ம் வருட பாகபாத்திய விடுதலை பத்திரம் துரைச்சாமி தேவருக்கு அவரது சகோதரர்களில் ஒருவரான முத்துகாளை தேவர் என்ற பாலையா தேவர் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான், வாய்மொழி பாகப்பிரிவினையின் படி எனது சித்தப்பா முத்துதேவர், தென்கரையம்மாள், கருப்பையம்மாள் ஆகியோர்களுக்கு சொத்துக்கள் கொடுக்கப்பட்டது.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞரின் வேண்டுக்கோளுக்கிணங்க குறுக்கு விசாரணை தொடர்ச்சி மற்றொரு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது)